## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் (“திட்டம்”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- திட்டம் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- திட்டத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 16.5 பில்லியன் தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா. 11.3 பில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 27.8 பில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இழப்பீட்டு கொடுப்பனவு குறைவடைந்தமையே இவ் முன்னேற்றத்திற்கான பிரதானமாக காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டத்தின் அங்கத்துவ நிறுவனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குமுறைகளின் பிரிவு 4.1 இன் படி, மற்றும் அதே திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும், ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் உரிமம் பெற்ற நிதி நிறுவனமும் திட்டத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். இருப்பினும் நுண் நிதி வணிகத்தில் ஈடுபட்டுள்ள உரிமம் பெற்ற நுண் நிதி நிறுவனங்கள் இந்த | 2019 ஆம் ஆண்டு மார்ச் 06 அன்று வழங்கப்பட்ட "வைப்புகள்" தொடர்பாக 2019 மார்ச் 06 ஆம் திகதி ஆம் திகதியிடப்பட்ட நுண்நிதிச் சட்டத்தின் வழிகாட்டல் 2019 இன் 1 இலக்கத்தின் படி ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண் நிதி நிறுவனமும் (LMFC) வைப்புத் தொகைகளை பிணை வைப்புத்தொகையாக மட்டுமே ஏற்கும். மேலும், LMFCகள் எப்போதும் நிகர கடன் வழங்குபவரின் நிலையில் இருக்கும், மேலும் LMFC இன் மொத்த வைப்புத்தொகை அதன் மொத்த செயல்திறன் கடன்கள் மற்றும் முன்பணங்களில் அறுபது சதவீதத்திற்கு மேல் | திட்டத்தின் உறுப்பினர்களாக LMFCகளை உருவாக்கும் சாத்தியத்தை கருத்தில் கொள்ள வேண்டும். |

விதிமுறைகளின் கீழ் வராது. எனவே, உரிமம் பெற்ற நுண் நிதி நிறுவனங்கள் இந்தத் திட்டத்தின் உறுப்பினர் நிறுவனங்களாக மாறத் தேவையில்லை. வழங்கப்பட்ட உரிமம் நாணய சபையால் ரத்து செய்யப்படும் போது, அத்தகைய நிறுவனங்களின் வைப்பாளர்கள் இழப்பீடு கோருவதற்கு உரிமை இல்லை. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, 2021 ஜூன் 30 இல் நான்கு நிறுவனங்கள் நுண் நிதி நிறுவனங்களாக உரிமம் பெற்றுள்ளன.

இருக்கக்கூடாது. LMFC இன் வாடிக்கையாளர் LMFC இலிருந்து பெறப்பட்ட நுண் நிதி கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தியிருந்தால், அத்தகைய LMFC பிணையப்படுத்தப்பட்ட வைப்புத்தொகையை அத்தகைய திருப்பிச் செலுத்தும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேல் வைத்திருக்காது என்று வழிகாட்டுதல் மேலும் குறிப்பிடுகிறது. அதன்படி, பொதுவாக, LMFC களின் அந்த ‘“வைப்புகள்’’ நிகர கடன் வாங்குபவர்கள்.

இந்தச் சூழ்நிலையில், நிதி நிறுவனங்களின் வைப்புத் தொகையாளர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை LMFCகளுக்கு சமமாக நீட்டிக்க முடியாது. எனவே இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கு தற்போதுள்ள ஒழுங்குமுறைகள் அத்தகைய வகையை உள்ளடக்காது.

## 3.2 அங்கத்துவ நிறுவனங்களிற்கான கடன்கள் (MIs)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 8.1 (ii) ஆம் பிரிவின் பிரகாரம், எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்திற்கும் அந்த அங்கத்துவ நிறுவனம் மோசமான திரவத்தன்மை பிரச்சினை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம் பிணையளிக்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்க முடியும். அதற்கமைய, 2014 திசெம்பர் 15 ஆந் திகதி ஒரு MI ற்கு ரூபா.6 பில்லியன் கடன் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அக்கடனில் பெறவேண்டிய தொகை ரூபா 1.47 பில்லியனாகும். நிதிசார் வணிகத்தை மேற்கொள்வதற்காக குறித்த MI ற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் 2020 மே 22 முதல் அமுலுக்குவரும் வகையில் நாணயச் சபையால் இரத்துச்செய்யப்பட்டது. இந்தக் கடன் மீதியைப் பொறுத்தவரை 31.12.2021 இல் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் ரூபா.1,095 மில்லியன் குறைபாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | நிலுவையாகவுள்ள கடன் மீதியினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திட்டத்தினால் குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரிடம் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு புதிய பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார். அதற்கமைய, 2015 திசெம்பர் 31 ஆந் திகதி திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்படி முதலீட்டின் மீது ரூபா 144.25 மில்லியன் நட்ட கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | எதிர்காலத்தில் இவ்வாறான இடரினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கொடுப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குமுறையின் பிரிவு 9.10 இன் படி, 2012 ஜனவரி 01 அல்லது அதற்குப் பிறகு நாணயச் சபையின் உத்தரவின்படி இடைநிறுத்தும்/ ரத்துச்செய்யும் சந்தர்பங்களில் இழப்பீடு வழுங்குதல் நடைமுறைக்கு வரும். ஆறு அங்கத்துவ நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் 2018,2019 மற்றும் 2020 ஆண்டுகளில் நாணய சபையால் ரத்து செய்யப்பட்டன/ இடைநிறுத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கியினால் 19.03.2021 அன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பின்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது இத்திட்டத்தின் கீழ் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையை ரூபா.600,000 இலிருந்து ரூபா.1,100,000 வாக ரூபா.500,000 வால் அதிகரிக்க முடிவு செய்திருந்தது. இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குவதற்காக, அத்தகைய நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து அல்லது இடைநிறுத்தப்பட்டால். கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, நாணயச் சபையினால் உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட ஆறு நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டிய மொத்த இழப்பீடு ரூபா. 35,243 மில்லியன் மற்றும் அதில் ரூபா. 29,242 மில்லியன் அல்லது 83 சதவீதம் திட்டத்தில் இருந்து 31.12.2021 இல் செலுத்தப்பட்டுள்ளது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | தகுதியான வைப்பாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கவும். |

## 3.5 காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு பிரீமியம் விதிக்கப்பட்டது

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் படி, உரிமம் பெற்ற நிதி நிறுவனங்கள் வருடாந்தம் 0.15 வீதம் பிரீமியம் செலுத்த வேண்டும், மாத இறுதியில் அனைத்து தகுதியான வைப்புத்தொகைகளின் மொத்தத் தொகையைக் கணக்கிட்டு மாதந்தோறும் செலுத்த வேண்டும். இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குமுறைகள், 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்தின் கீழும் நிதி நிறுவனங்களுக்கு இதே போன்ற சதவீதத்தைக் கொண்டுள்ளது. நாணய சபையால் உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட ஆறு நிதி நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த பிரீமியம் ரூபா. 845.6 மில்லியன் மற்றும் மொத்த இழப்பீடு 31 டிசம்பர் 2021 நிலவரப்படி ரூபா.35,243 மில்லியன். இழப்பீட்டுத் தொகை 2021 ஆம் ஆண்டில் ரூபா.600,000 இருந்து ரூபா.1,100,000 ஆக நாணய சபையால் நிதி நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்கப்படும் பிரீமியத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கலாம். | இந்த வகையான காப்பீட்டுத் திட்டத்தில், ஒரு நிதி நிறுவனத்தின் வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையானது குறிப்பிட்ட நிதி நிறுவனத்திடம் இருந்து வசூலிக்கப்படும் பிரீமியத்தை விட அதிகமாக இருக்கலாம். அனைத்து உறுப்பு நிறுவனங்களிடமிருந்தும் பிரீமியம் வசூலிக்கப்படும் விகிதம், நாட்டின் மேக்ரோ பொருளாதாரச் சூழல் உட்பட பிரச்சினையின் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. அதன்படி, பிரீமியம் விகிதங்கள் மற்றும் கணக்கீட்டு முறை ஆகியவற்றை நிர்ணயிக்க அவ்வப்போது கொள்கை முடிவுகள் எடுக்கப்படுகின்றன. | ஆபத்து அடிப்படையிலான பிரீமியம் முறையை செயல்படுத்துவது பற்றி பரிசீலிக்க வேண்டும். |